No.C.25/2024 12.12.2024

# யூபிலி 2025
# நம்பிக்கை ஆண்டு

**அன்பிற்கினிய இறைமக்களே,**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிழ்ச்சியும் அமைதியும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

கிறிஸ்து பிறப்பின் 2025ஆம் ஆண்டை யூபிலி ஆண்டாகக் கொண்டாட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்துள்ளதை நாம் அறிவோம். திருஅவையின் நம்பிக்கையாளர்களாகிய நாம் அனைவரும் இவ்வாண்டை நம்பிக்கை ஆண்டாகவும், அதனை **"எதிர்நோக்கின் திருப்பயணிகள்"** என்னும் கருப்பொருளிலும் சிந்தித்துப் பயணிக்கவும் அன்போடு அவர் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். இதன் முன்தயாரிப்பாக இரண்டாம் வத்திக்கான் சங்க நான்குக் கோட்பாட்டு விளக்க ஏடுகளை (திருஅவை, இறைவெளிப்பாடு, திருவழிபாடு, இன்றைய உலகில் திருஅவை) மறுவாசிப்பு செய்யவும், இறைவேண்டல் வழி நம் அருள்வாழ்வை ஆழப்படுத்தி நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், "குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ" (1 பேது 1:3) யூபிலி ஆண்டில் நம்மை ஊக்கப்படுத்துகின்றார்.

## யூபிலி ஆண்டு

திருவிவிலிய மரபுப் படி, யூபிலி ஆண்டை இஸ்ரயேல் மக்கள் ஒவ்வோர் ஐம்பதாம் ஆண்டில் கொண்டாடி மகிழ்ந்தனர் (லேவி 25:8–13). இவ்வாண்டில் இறைவனின் பெயரால் ஒன்று கூடினர்; இழந்த தங்கள் நிலங்களைத் திரும்ப பெற்றனர்; அடிமைகள் விடுதலை பெற்றனர்; பாவங்களுக்காக மன்னிப்பு பெற்றனர். இறைவாக்கினர் எசாயா யூபிலியை "ஆண்டவர் அருள்தரும் ஆண்டு" (எசா 61:2) என வெளிப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு "ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" என்ற மறைநூல் வாக்கை வாசித்து அது தன்னில் நிறைவேறியதைச் சுட்டிக்காட்டுகின்றார் (லூக் 4:19,21) யூபிலி ஆண்டில் இஸ்ரயேல் மக்கள் எக்காளம் ஊதி எவ்வாறு இறைவனின் பெயரால் ஒன்றுகூட்டப்பட்டார்களோ, அதைப்போன்று திருஅவையின் மக்களாகிய நாமும் கிறிஸ்துவின் வழியாகக் கிடைத்த மீட்பைக் கொண்டாட ஒன்றிணைக்கப்படுகின்றோம். எனவே, கிறிஸ்து பிறப்பின் 2025ஆம் ஆண்டை மகிழ்ச்சியோடு மீட்பின் ஆண்டாகவும், அருள்தரும் ஆண்டாகவும் இந்த யூபிலி ஆண்டில் கொண்டாடுவது பொருத்தமானதாகும்.

## எதிர்நோக்கின் திருப்பயணிகள்

“எதிர்நோக்கு ஏமாற்றம் தராது” (உரோ 5.5) என்ற பவுலடியாரின் வார்த்தைகளைத் தலைப்பிட்டு எழுதிய யூபிலித் திருமடலில், திருத்தந்தை பிரான்சிஸ் எதிர்நோக்குப் பற்றியச் செய்தியை எல்லா நிலையினருக்கும் தருகின்றார். கடவுள் தம் வாக்குறுதிகளுக்கு உண்மை உள்ளவர்; அவரால் இயலாதது ஒன்றுமில்லை, எதுவும் நம்மை அவரின் அன்பிலிருந்து பிரிக்க முடியாது என்ற நம்பிக்கையை நினைவூட்டுகின்றார். உலகிலுள்ள கிறிஸ்தவ மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்த உயிர்ப்புப் பெருவிழாவை ஒரே நாளில் (ஏப்ரல் 20, 2025) கொண்டாடி நாம் கிறிஸ்துவில் ஒன்றிணையவும், அதன் வழியாக நம் உறவையும், ஒற்றுமையையும், நம்பிக்கையையும் வலுப்படுத்த வேண்டும் என்ற தன் விருப்பத்தையும் வெளிப்படுத்துகின்றார். இவ்வாண்டு நைசியா திருச்சங்கத்தின் (கி.பி. 325) 1700வது ஆண்டின் நிறைவில் நமது எதிர்நோக்கிற்கு ஆதாரமான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பி, ஒருங்கிணைந்த திருஅவையின் பாதையை ஒளிரச்செய்ய வேண்டும் எனவும் அழைக்கின்றார்.

வன்முறைகளும் போர்களும் மனித குலத்தின் எதிர்நோக்கிற்கு அச்சுறுத்தலாகவே உள்ளன. உறவுகளையும், அடிப்படை உரிமைகளையும், சொந்த நாட்டையும் இழந்து அகதிகளாகத் துன்புறும் மக்களுக்கு யூபிலி நம்பிக்கையை விதைக்க வேண்டும். அமைதி என்பது போரில்லாச் சூழல் மட்டுமல்ல; உலகளாவிய சகோதரத்துவத்தின் உணர்வில் அமைதியைக் கொணர வேண்டும். ஆயுதங்களைக் களைந்து அமைதிக்கான புதுவாழ்வை யாவரும் ஏற்க வேண்டும். மனிதகுலத்தின் உடலில் திறந்த காயமாக இருக்கும் பசியைப் போக்க நாடுகள் முன்வர வேண்டும். ஆயுதங்கள், பிற இராணுவச் செலவினங்களைக் குறைத்து ஏழ்மையான நாடுகளின் வளர்ச்சிக்கு உதவி செய்யவும் முடிவுக்குக் கொண்டுவரவும் முயன்றிட வேண்டும் எனவும் உலகத் தலைவர்களுக்குத் திருத்தந்தை அறைகூவல் விடுக்கிறார்.

யூபிலி ஆண்டில் குடும்பங்களில் அன்பு நிரப்பப்பட வேண்டும். இளைஞர்களுக்குப் புதிய ஊக்கத்தை அளிக்க வேண்டும். அவர்களின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றவோ, அவர்களின் சிறகுகளை வெட்டவோ முடியாது. இளைஞர் உள்ளங்களில் எரியும் நம்பிக்கைக் கனலை ஊக்குவிக்க வேண்டும். மனித மாண்பும் மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு இன்னல்களை அனுபவிக்கும் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையின் அடையாளங்களாய் நாம் பிரதிபலிக்க வேண்டும். ஏனென்றால் “ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை. அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை” (புல 3:22). எனவே, சிறைக்கைதிகள், நோயாளர்கள், இளைஞர்கள். புலம்பெயர்ந்தோர். நாடு கடத்தப்பட்டோர்,

அகதிகள், கைவிடப்பட்ட முதியோர். தாத்தா பாட்டிகள், ஏழைகள் என அனைவரின் இதயங்களிலும் நம்பிக்கை ஒளி ஒளிர அதற்கான முன்னெடுப்புகளை நாம் இவ்வாண்டு நேர்த்தியோடு முன்னெடுப்போம்.

“எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள்; இறைவேண்டலில் நிலைத்திருங்கள்” (உரோ 12:12) என்ற பவுலடியாரின் வார்த்தைக்கேற்ப எப்பொழுதும் உள்ள உறுதியோடு இறைவனின் அன்பில் நிலைத்திருப்போம்.

## யூபிலிக் கொண்டாட்டம்

டிசம்பர் 24ஆம் நாள் நமது திருத்தந்தை பிரான்சிஸ் யூபிலி ஆண்டின் நிகழ்வை புனித பேதுரு பேராலயத்தின் புனித கதவைத் திறந்து துவக்கி வைக்கிறார். டிசம்பர் 29, ஞாயிறன்று உலகத்தின் அனைத்து மறைமாவட்டப் பேராலயங்களிலும் யூபிலி ஆண்டின் தொடக்க நிகழ்வு நடைபெறுகிறது. நமது மறைமாவட்டத்தில் எனது தலைமையில் டிசம்பர் 29ஆம் நாள் யூபிலி ஆண்டு துவக்க நிகழ்வு புனித சவேரியார் பெருங்கோவிலில் வைத்து மாலை 4.30 மணிக்குத் திருப்பலியோடு நடைபெறும் இத்திருநிகழ்வில் நம் மறைமாவட்டத்தில் அனைத்துப் பங்குகளிலிருந்தும் இறைமக்கள் திரளாகக் கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் “எதிர்நோக்கின் திருப்பயணிகளாய்” இவ்வாண்டு முழுவதும் நம் அருள்வாழ்வை புதுப்பிக்கவும், நம்பிக்கை இழந்தோருக்கு நம்பிக்கை ஒளி கொடுக்கவும் திருப்பயணமாவோம். நம் பங்குகளில் நடத்தும் சிறப்பு யூபிலி திருப்பலி, ஒப்புரவு அருளடையாளம், சிறப்பு நற்கருணை ஆராதனை போன்றவை நம் இறைவாழ்வைப் புதுப்பிக்கட்டும். பங்கு அருள்பணியாளர்கள் இதற்கு ஆவனச் செய்யவும் வேண்டுகிறேன்.

## பரிந்துரைகள்

- ✪ நமது மறைமாவட்ட அருள்பணிக்குழுக்களின் வழியாக முன்னெடுக்கும் அனைத்து உருவாக்கப் பணிகளையும், நலப் பணிகளையும் நாம் ஆர்வத்தோடும் அர்ப்பணத்தோடும் இணைந்து செய்வோம்.
- ✪ பங்களவிலும் மறைவட்ட அளவிலும் யூபிலிக் குழுக்களை உருவாக்கி, யூபிலி சிறப்புச் செயல்பாடுகளை முன்னெடுப்போம்.
- ✪ ஒவ்வொரு திருப்பலி முடிவிலும் யூபிலி சிறப்பு இறைவேண்டலை மன்றாடுவோம்.
- ✪ 25 எண்ணை மையப்படுத்தி எல்லாப் பங்கேற்பு அமைப்புகளும் 25 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளைச் (கல்வி உதவி, மருத்துவ உதவி, திருமண உதவி, நலிந்த குடும்பங்கள் மற்றும் பட்டியலினத்தவர் பராமரிப்பு நிதி) செய்ய முயற்சிக்கலாம்.

- ✪ சிறைக்கைதிகள், நோயாளர்கள், ஆதரவற்றோர் ஆகியோரைச் சிறப்பாக சந்திக்கலாம்.
- ✪ யூபிலியை மையப்படுத்திய கருத்தமர்வுகளையும் பயிற்சிகளையும் ஏற்பாடு செய்யலாம்.
- ✪ யூபிலியை மையப்படுத்திய திருவிழா மையச்சிந்தனைகளைத் தேர்வு செய்யலாம்.
- ✪ யூபிலியை மையப்படுத்தி சகோதர சபையினரோடு உள்ள உறவைப் புதுப்பிக்கலாம். இணைந்த செயல்பாடுகளை முன்னெடுக்கலாம்.

"எதிர்நோக்கை தரும் கடவுள் நம்பிக்கையால் உண்டாகும் பெருமகிழ்ச்சியாலும், அமைதியாலும் உங்களை நிரப்புவாராக!" (உரோ 15:13) என உங்களை அன்போடு வாழ்த்துகின்றேன்.

எதிர்நோக்கின் அன்னையாகிய கடவுளின் தாய் மரியாவைப் போன்று குன்றாத எதிர்நோக்குடன் இயேசுவின் இறையாட்சிப் பணித் தொடர்வோம்.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்.

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் 15.12.2024 ஞாயிறன்று திருப்பலியின் போது வாசிக்கப்பட வேண்டும்.